செ.வெ.எண்: 49 நாள்:18.02.2020

**தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை பிரிவு மற்றும் பல்வேறு பிரிவுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைப்பதையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் மருத்துவமனையை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

---

தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.86 கோடி மதிப்பில் கட்டப்பட்ட கட்டடம் மற்றும் ரூ.14 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை கருவி மற்றும் ரூ.2.13 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள இதயவியல் பிரிவு, ரூ.50 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சிறுநீரகம் டயாலிஸ் பிரிவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.02.2020 அன்று திறந்து வைப்பதை முன்னிட்டு மாவட்ட ஆட்சீத்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.02.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை டீன் திரு.திருவாசகம், உறைவிட மருத்துவர் திரு.சைலேஷ் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.